1970 மார்ச் 13]

வேண்டிய நிலைமை இருப்பதனால், அதை மனதில் கொண்டு, நதிநீர் பங்கீட்டில் எப்படி சுலபமாக பிரச்னையைத் தீர்த்து வைத்ததோ தமிழக அரசு அதே போன்று, கேரள சர்க்காருடன் பேசி, இந்தப் பிரச்னைக்கு முடிவு கண்டு டீலக்ஸ் பஸ் விடுவதற்கு இனிமேலாவது இந்த அரசாங்கம் முயற்சி மேற்கொள்ளுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சென்னைக்கும் திருவனந்தபுரத்திற்கும் இடையே தூரம் 470 மைல், பிரயாண நேரம் 20 மணி என்று சொல்லப்படுகிறது. தற்பொழுது இது பற்றிய செயற்குறிப்பு ஒன்றுமில்லை. கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்தை மனதில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : சென்னைக்கும் நாகர்கோவிலுக்கும் இப் பொழுது நேராக பஸ்போக்குவரத்து இல்லை. திருச்சியில் இறங்கி, இன்னொரு பஸ்ஸில் செல்ல வேண்டியிருக்கிறது. ஏற்கனவே இருந்த அரசு சென்னைக்கும் நாகர்கோவிலுக்கும் ஒரே பஸ், அதுவும் வசதி நிறைந்த பஸ் விடுவது என்று ஒரு திட்டம் வைத்திருந்தது. அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது. இந்த அரசு அதை நிறைவேற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைப்பற்றிய தகவல் என்னிடம் இல்லை. ஆனாலும், கனம் உறுப்பினரின் கேள்வி கவனத்தில் கொள்ளப்படும்.

காஞ்சீபுரத்துக்குப் பேருந்து வசதிகள்

*361 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்ட தலைநகர் காஞ்சிபுரத்திற்கு மாற்றப் பட்டு விட்டதால் மாவட்டத்திலுள்ள பல ஊர்களிலிருந்து போது மான பஸ்கள் விட உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : செங்கற்பட்டு மாவட்டத் தலைமையிடத்தைக் காஞ்சிபுரத்துக்கு மாற்றிய பிறகு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை காஞ்சிபுரத்துக்கும் காஞ்சீபுரம் வழியாகவும் மூன்று புதிய வழித்தடங்களை இயக்கு கிறது. அத்துடன் தனியார் பேருந்து முதலாளிகள் மூவர் காஞ்சி புரத்தைத் தொட்டுச் செல்கிற வகையில் மூன்று வழித்தடங்களில் பேருந்துகள் விடுகின்றனர். இவையன்றி, மேலும் பதினொரு வழித் தடங்களுக்கு தனியார் பேருந்து முதலாளிகளுக்கு அனுமதிச் சீட்டுகளை வழங்குவது பற்றி போக்குவரத்து ஆணையாளர் ஆலோ சித்து வருகிறார்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, காஞ்சீபுரம் தலைநகரமாக மாற்றப்பட்டு, இரண்டு ஆண்டுகள் ஆகியும், குறிப்பாக மதுராந்தகம் போன்ற பகுதியிலிருந்து பஸ்கள் வேண்டும் என்று பலமுறை வற்புறுத்தப்பட்டும், வழித்தடங்கள் கொடுப்பதற்கு காலதாமதம் ஏற்படுகிற காரணத்தினால், உடனடியாக அந்த வழித்தடங்களை வழங்குவதற்கு அரசு உத்தேசிக்குமா? அத்துடன் தனியாருக்கு வழித்தடங்கள் வழங்குவதற்குப் போக்குவரத்துத் துறை அதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன என்று தெரிவித்துள்ளது. இதை யெல்லாம் உடனடியாகப் பரிசீலனை செய்து தலைநகரத்திற்குப் போவதற்கு அதிகமான பஸ்கள் விடுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே நான் சொல்லியது போல போக்குவரத்து ஆணையாளர் அவர்கள் ஆலோசித்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்குப் பிறகு தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து காஞ்சிபுரம் வரையிலே அரசாங்கப் பஸ் போக்குவரத்து போகிறது. காஞ்சிபுரம் வழியாக பல ஊர்களுக்கு அரசு போக்குவரத்து பஸ் போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் சென்னையிலிருந்து காஞ்சீபுரம் வரையில் போகிற பஸ்ஸில் 1.46 காசும், காஞ்சிபுரம் வழியாக வேறு ஊர்களுக்குப் போகிற பஸ்களில் 1.90 காசும் வசூலிக்கப்படுகிறது. இது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா? ஆமெனில், இந்த வித்தியாசத்தைப் போக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வி மூலம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Consequent on the shifting of the headquarters from Saidapet to Conjeevaram, people are put to great difficulty in getting into contact with headquarters of the district. Would the Government think of the possibility of connecting all taluk town centres with Conjeevaram by direct route instead of making them to change from place to place. Would the Government think of the possibility of offering direct route buses connecting headquarters of district with taluk headquarters ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் இதுபோன்ற செயற்குறிப்பு அரசாங்கத்திற்கு வருமானால், அது பற்றி பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கலாம்.

Marriage advances to teachers of Local Bodies

* 362 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government propose to grant marriage loans to teachers employed in Local Bodies too; and

(b) if so, how soon ?